பயிலரங்கம் - 16 **மொழியியல் புலம்** நாள்: 12.01.2024

# சமூகவியல், உளவியல், மொழியியல் மற்றும் பண்பாட்டியல் நோக்கில் தொல்காப்பிய உரைகள்

# Commentaries on Tolkāppiyam: From Sociological, Psychological, Linguistic and Cultural Perspectives

(20.02.2024 - 29.02.2024)

## அறிவிப்பும் அழைப்பும்

உலகின் பழமையான நூல்களில் ஒன்றாக நம் தமிழில் உள்ள '**தொல்காப்பியம்**' திகழ்கிறது. தமிழ் மொழியின் இலக்கியம், பண்பாடு ஆகியவற்றிக்கு ஓர் உரைகல்லாக அது விளங்குகிறது. சங்கக் கவிஞர்களின் மனச்சாட்சி தொல்காப்பியம் என்று **பிரான்சுவா குரோ (François Gros)** கூறியுள்ளார். இந்நூலுக்குக் குறைந்தது **10** நூற்றாண்டுகளுக்கு முன் **இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், கல்லாடர்** முதலான அறிஞர்கள் தொல்காப்பியத்திற்கு உரை எழுதியுள்ளனர். "தமிழரின் மொழி ஆற்றலையும், பண்பாட்டு வாழ்வியல் கூறுகளையும் வெளிக்காட்டுவதோடு வருங்காலப் புது உலகுக்கு வழிகாட்டியாகவும் திகழ்வது தொல்காப்பியமாகும்". இது "முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்ப் போற்றித் திகழும் சிறப்புடையது". தொல்காப்பியத்தின் கருத்தை உணரவும் உணர்த்தவும் புலவர் பெருமக்கள் காலந்தோறும் பல உரைகளை உருவாக்கினார்கள். அம்முயற்சியின் விளைவாய் உரைகள் பெருகி இது உரைவளம் கொண்ட பெருநூலாய் விளங்குகிறது.

ஒரு மொழியை அறிவியல் அடிப்படையில் அணுகி ஆய்வு செய்யும் முறையை மொழியியல் ஆய்வு என்பர். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியரின்

அணுகுமுறை மொழியியல் சார்ந்ததாகும் என்பதில் ஐயமில்லை. இதனை வெறும் மரபிலக்கணமாகக் கருதாமல் மொழி நூலாகவும் பார்த்தல் வேண்டும். மொழியியல் வளர்ந்துவரும் துறைகளில் ஒன்றாக உள்ளநிலையில், தமிழ் மொழி இலக்கண நூலாம் தொல்காப்பியத்தில் காணப்படும் சமூகம், பண்பாடு, மற்றும் உளவியல் கூறுகளை மொழியியல் பார்வையில் அணுகி ஆராய்தல் மிகத் தேவையாகும். இவற்றை மேற்கொள்ளும் முயற்சி இப்பயிலரங்கின் நோக்கமாக அமைகிறது.

தமிழர் பண்பாட்டை மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் வளர்த்து வந்த இலக்கியங்களும் கவின்கலைகளும் எடுத்துக்காட்டுகின்றன. “பண்பாடு உடையவரைச் சான்றோர் என்றும், ஒழுக்கமுடையோர் என்றும், ஒளியோரென்றும், மாசற்ற காட்சியுடையோர்” என்றும் அழைத்தனர். ஆங்கிலத்தில் **Culture** எனப்படும் சொல்லைத் தமிழில் பண்பாடு என்று குறிப்பிடுகின்றோம். மனத்தையும் மக்களையும் பண்படுத்துவது பண்பு. இச்சொல்லைத்தான் ‘**பண்பாடு**’ என்னும் பொருளில் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தியுள்ளனர். தமிழர் பண்பாட்டின் களஞ்சியங்களாகக் குறிப்பிட வேண்டுமாயின் சங்க நூல்களைக் குறிப்பிடலாம். தமிழர்களின் கலாச்சாரமானது தமிழ் மக்கள் மட்டுமின்றி ஏனையவர்களிடமும் மதிப்புக்குரிய ஒரு கலாச்சாரமாகத் திகழ்கின்றது. தமிழர் கலாச்சாரம் மொழி, இசை, ஆடை, பாரம்பரியம், கோவில்கள், நடனம், கல்வெட்டுகள், இலக்கியங்கள், பழக்க வழக்கங்கள், விருந்தோம்பல், விழாக்கள், மருத்துவம் போன்ற பலவற்றில் மேலோங்கிக் காணப்படுகின்றது.

உலகியலைப் படம்பிடித்து அழகாகக் காட்டிய புலவர்களது நூல் காலங்கடந்து நிற்க வேண்டுமெனில் அக்கால இயல்பைக் காட்டுவது மட்டுமின்றி அக்காவியத்தினுள் காணக்கிடக்கும் மக்களின் சமுதாயம், உளவியல் மற்றும் பண்பாட்டையும் உயிர்போன்று விளக்கிக்காட்ட வேண்டும். அத்தகைய சிறந்த, உயர்ந்த, ஒப்பற்ற பண்பாட்டை விளக்கிக்காட்டும் நூல்தான் தொன்மையான தொல்காப்பியம். இந்நூல் பழந்தமிழ் நாகரிகத்தின் செம்மையினையும், செம்மாந்த பெருநிலையினையும் தெள்ளத்தெளிய விளக்கிக்காட்டும் ஒப்பற்ற

ஒளிவிளக்கமாகும். அவ்வகையில் தொன்மையான தமிழினத்தின் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் வரலாற்றைத் தொல்காப்பியத்தின் வழி ஆராய்வதே இப்பயிலரங்கின் முதன்மை நோக்கமாகும்.

ஒப்பீட்டு மொழியியல், **(Comparative Linguistics)**, விளக்க மொழியியல், **(Descriptive Linguistics)**, குறியீட்டு மொழியியல் **(Semiotics)**, சமூக மொழியியல், **(Sociolinguistics)**, கலாச்சார மொழியியல் **(Cultural Linguistics)**, உள மொழியியல் **(Psycholinguistics)**, மொழிகற்றல், **(Language learning)**, கிளைமொழியியல், **(Dialectology)**, மானிட மொழியியல், **(Human Linguistics)**ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பிய இலக்கணத்தை அறிஞர்கள் ஆய்வுரையாக வழங்குவார்கள்.

இப்பயிலரங்கு **20.02.2024** முதல் **29.02.2024** முடிய பத்து நாட்கள் நடைபெறவுள்ளன. எனவே, தமிழ், மொழியியல், வரலாறு, உளவியல் மற்றும் சமூகவியல் துறைசார்ந்த ஆய்வு மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழி நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**பயிலரங்க விதிமுறைகள், விவரங்கள் கீழ்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை: **40**
2. பயிலரங்கம் நடைபெறும் நாட்கள்: **20.02.2024** முதல் **29.02.2024** முடிய பத்து நாட்கள்
3. பயிலரங்கம் நடைபெறும் நேரம்: காலை **10.00 – 1.00 &** மாலை **2.00 – 5.00**.
4. மத்திய அரசு விதிமுறைகளின்படி பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் தினப்படியும் வழங்கப்படும்.
5. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை அனைத்துப் பகுதியும் நிறைவுசெய்து **workshopling@cict.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத்

தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும்.

8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/ புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
11. விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **12.02.2024** இதற்குப் பின்வரும் விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கபட்டவர்களுக்கு **13.02.2024** அன்று மின்னஞ்சல் / புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.
13. இப்பயிலரங்கில் பங்கேற்போர் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் தினப்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)

செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)

Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

सत्यमेव जयते

**பயிலரங்கம் – 16**

## மொழியியல் புலம்

## சமூகவியல், உளவியல், மொழியியல் மற்றும் பண்பாட்டியல் நோக்கில் தொல்காப்பிய உரைகள்

## Commentaries on Tolkāppiyam: From Sociological, Psychological, Linguistic and Cultural Perspectives

**(20.02.2024 - 29.02.2024)**

**அறிவிப்பும் அழைப்பும்**

**விண்ணப்பப் படிவம்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர்\| **Name** | தமிழ் | | | | | | நிழற்படம்/ **Photo** |
| | | **English** | | | | | | |
| 2. | பிறந்த நாள் / வயது **Date of Birth/ Age** | | | | | | | |
| 3. | பாலினம் \| **Gender** | ஆண்/ **Male** | | பெண்/ **Female** | | திருநங்கை/ **Transgender** | | |
| 4. | வகுப்பு \| **Class** | | | பொது/ **General** | | இ.பி.வ.\| **OBC** | | பட்டியல் இனம் \| **SC/ ST** |
| 5. | கல்வித் தகுதி \| **Educational Qualification** | | | | | | | |
| 6. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ ஆண்டு **\| Date of Joining & year in M. Phil & Ph.D.** | முழுநேரம் | | | | | | |
| | | பகுதிநேரம் | | | | | | |
| 7. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு **\| M.Phil & Ph.D. Research Topic** | | | | | | | |
| 8. | பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொடர்பு எண் & மின்னஞ்சல்) **\| University / College/Institute Address (Contact number & Email)** | | | | | | | |

| | | |
|---|---|---|
| 9. | இல்ல முகவரி & தொடர்பு எண்/ **Residential address & Contact number** | |
| 10. | புலன எண் **\| WhatsApp number** | |
| 11. | செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக **\| Did you attend the workshop conducted by the CICT in previous academic years? If yes, please give details** | ஆம் **\| Yes** |
| | | இல்லை**\| No** |

**(கையொப்பம்)**

**நெறியாளர் /துறைத் தலைவர்/**
**முதல்வர்/ பதிவாளர் உரிய முத்திரையுடன்**

**இடம்:**
**நாள்:**